# இராணிப்பேட்டை நகராட்சி

## 2018 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 6 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 06.06.2018 | **பொருள் எண். 2879**<br><br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 50638 மக்கள் தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 17 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது மருதம்பாக்கம் கிராமத்தில் உள்ள உரக்கிடங்கில் (சுமார் 10.82 ஏக்கர்) நிலப்பரப்பில் கொட்டப்பட்டு வருகிறது. தற்பொழுது, நகராட்சியில் உள்ள 47 தள்ளுவண்டிகள், 7 சைக்கிள் ரிக்ஷா மிதிவண்டிகள் (Tricycle) மூலம் சுமார் 30.80% வீடுகளில் திடக்கழிவுகள் மக்கும் மக்காத குப்பைகள் என பிரித்து வாங்கப்படுகிறது நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 3 மெட்ரிக் டன் (15விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின், 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் (கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம்) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக்டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இது சம்மந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டு காலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துக்கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சியின் வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தரவேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இது சம்மந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் | நகரமன்றத் தீர்மானம் எண். 2879<br>1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கொடுத்துள்ளனர்.<br><br>இராணிப்பேட்டை நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 3 மெ.டன் திடக்கழிவுகளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே, அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டு காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துக்கொள்ளவும் அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>1. இராணிப்பேட்டை நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. பத்து ஆண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .<br><br>**(ந.க.எண்.1586/2018/எச்1)** | |
| | **<u>2018 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள</u>** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2880</u>**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** | நகரமன்றத் தீர்மானம் எண். 2880 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2881</u>**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2881 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2882</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை பகுதியில் அமைந்துள்ள 14.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு வெளிப்புறத்தில் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்திற்கென குடிநீர் விநியோகத்திற்கு கட்டப்பட்டுள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு (Sump) நீர் நிரப்பும் போது ஒரு சில நேரங்களில் முழு கொள்ளளவும் நிரம்பி வழிகிறது (Over Flow) இதனால் குடிநீர் வீணாக வெளியில் சென்று வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு மேற்படி வீணாகும் குடிநீரை பைப்லைன் அமைத்து அருகிலுள்ள மேற்படி 14.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நிரம்பும் வகையில் அமைப்பதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1605/2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2882 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2883</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை பகுதியில் அமைந்துள்ள ஆடு அறுக்கும் தொட்டி கட்டிடத்திற்கு கீழ்கண்ட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>1) கட்டிடம் மராமத்து பணி<br>2) தண்ணீர் சப்ளைக்கென புதியதாக பைப்புகள் பொருத்துதல்<br>3) மின்சார வசதி ( பராமரிப்பு ) பணிகள்<br>4) கழிவறை பராமரிப்பு பணிகள்.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1606/2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2883 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2884</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள அனைத்து விதமான குதிரை திறன் சக்தி கொண்ட மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்து பராமரித்திடும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1604/2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2884 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2885</u>**<br>இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை இந்நகராட்சிக்கு உட்பட்ட சீனிவாசன்பேட்டையிலுள்ள உரக்கிடங்கில் குவியலாக குவிக்கப்பட்டுள்ளது. மேற்படி உரக்கிடங்கில் உள்ள திடக்கழிவுகளை இயந்திரங்கள் பொருத்தி பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில்கள், துணிகள் உரம் என தனித்தனியாக பிரிக்கும் பணிகள் மேற்கொள்ள ( உயிர்சுரங்கப்பணி) செலவினம் ரூ. 204.00 இலட்சத்திற்கான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுகளை இயந்திரம் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள | நகரமன்றத் தீர்மானம் எண். 2885 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.காந்தி அவர்கள் இராணிடெக் (தொழிற்சாலை சங்கத்தில்) தன்னிறைவு திட்டத்தில் ரூ.10.00 இலட்சம் பெற்று Processing Mechene அமைக்கப்பட்டுள்ளது. மேலும் (BIOMINING) உயிர் சுரங்கப்பணி செயல்படுத்துவதற்கும், மேற்படி பணி நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்காமல் பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி JCB வாகனம் இயக்குவதற்கும் அதற்காகும் டீசல் மற்றும் ஓட்டுநர் ஊதியத்திற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மட்டும் செலவினம் மேற்கொள்ளவும் இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களை கொண்டு தற்காலிகமாக மேற்படி பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று (BIOMINING) உயர்சுரங்கப் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1608/2018/எச்1)** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2886</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள கழிப்பிடங்களை பராமரிக்கும் பணியினை இந்நகராட்சி உத்திரவு ந.க.எண்.226/2013/எச்1 நாள் 29.08.2014–ன்படி திரு.எ.பஞ்சாட்சரம் எண்.1, சுப்பிரமணிய கோயில் தெரு, காரை, இராணிப்பேட்டை அவர்கள் செய்து வருகின்றார். நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களிடமிருந்து கொள்கை ரீதியான அனுமதி பெறப்படும் வரை திரு.எ.பஞ்சாட்சரம் அவர்கள் மேற்படி பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மானம் எண்.1573 நாள் 27.08.2014–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கொள்கை ரீதியான அனுமதி அளிக்க வேண்டி 01.09.2014–ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 09.09.2015, 15.02.2016, 15.04.2016 மற்றும் 18.08.2016 ஆகிய தேதிகளில் நினைவூட்டு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் இது நாள் வரை கொள்கை ரீதியான அனுமதி பெறப்படவில்லை. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம் , P Section –ல் இது குறித்து கேட்ட போது அனைத்து நகராட்சிகளிலும் உள்ள சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகளை பராமரிக்கும் பணிக்கு பொதுவான நடைமுறையினை பின்பற்ற கொள்கை ரீதியான அனுமதி அளிக்கப்படும் என்றும் அது வரை தற்போது பின்பற்றப்படும் நடைமுறையை பின்பற்றிக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட கழிப்பிடங்களை பராமரிக்கும் பணிக்கு ஓராண்டு காலத்திற்கு தோராய செலவினம் தொகை ரூ.6,00,000/–பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மேலும், அதே ஒப்பந்ததாரரை பணியினை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்றத் தீர்மானம் எண். 2886 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **(ந.க.எண்.226/2013/எச்1)** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2887</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் குத்தகை காலம் முடிவடைந்த கடையின் குத்தகைதாரர்களுக்கு கடை வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.3807/16/அ3 நாள் 03.03.2017–ல் தெரிவிக்கப்பட்டது. அதனை எதிர்த்து 1) எஸ்.லிங்கமூர்த்தி வண்டி மேட்டுத் தெரு கடை எண். 28 2) எம். சங்கரன் வண்டி மேட்டுத் தெரு கடை எண். 8 3) எம். சண்முகம் வண்டி மேட்டுத் தெரு கடை எண். 6 4) எம். சண்முகம் வண்டி மேட்டுத் தெரு கடை எண். 7 5) எ.மாதவன் வண்டி மேட்டுத் தெரு கடை எண். 10 6) வி. ராமன் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 11 7) சி. திருமலை முத்துக்கடை சந்திப்பு கடை எண்.18 8) கே. விஸ்வநாதன் ஆடு தொட்டி வணிக வளாக கடை எண். 5 9) டி. சரஸ்வதி தினசரி சந்தை வளாக கடை எண். 5 10) எஸ். தேவகி முத்துக்கடை சந்திப்பு கடை எண். 7 11) எம். நாகப்பன் அம்மூர் ரோடு கடை எண். 1 12) டி.பாபு முத்துக்கடை சந்திப்பு கடை எண். 17 13) எம். சுப்பிரமணி அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண். 2 14) எம். வேலாயுதம் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 8 15) ஆர். வேலு முத்துக்கடை சந்திப்பு கடை எண். 4 16) எஸ். செல்வம் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 6 17) கே. சிவராஜி இரும்பு பங்க் கடை எண். 18 18) டி. சகாதேவன் முத்துக்கடை சந்திப்பு கடை எண்.15 19) ஜே.மகேஸ்வரி முத்துக்கடை சந்திப்பு கடை எண்.13 20) என். துரைமுருகன் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 16 21) தமிழ்வாணன் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 14 22) ஜே. மலர் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 10 23) சரஸ்வதி தினசரி சந்தை வளாக கடை எண். 13 24) எம். சுப்பிரமணி அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண். 3 25) கே. ராஜ் அம்மூர் ரோடு கடை எண். 4 26) எஸ். செழியன் ஆர்.ஆர். ரோடு கடை எண். 7 27) எஸ். புருஷோத்தமன் இரும்பு பங்க் கடை எண். 3 28) டி. விஜயன் இரும்பு பங்க் கடை எண். 20 29) என். வரதன் முத்துக்கடை எம்.பி.டி. ரோடு கடை எண். 1A 30) பி. ராணி முத்துக்கடை சந்திப்பு கடை எண். 31) டி. கன்னியப்பன் முத்துக்கடை சந்திப்பு கடை எண். 5 32) எஸ். ஜெயகுமார் அம்மூர் ரோடு கடை எண். 4 33) எம்.கே. லோகநாதன் இரும்பு பங்க் கடை எண். 13 34) இ. ஏஜாஸ் தினசரி சந்தை வளாக கடை எண். 14 ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 13022/18 முதல் 13026/18 வரை, 13048/18 முதல் 13066/18 வரை மற்றும் 13142/18 முதல் 13151/18–ல் பிரதிவாதியாக 1) அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை 2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 3) மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் 4) மாவட்ட ஆட்சியர், வேலூர் 5) ஆணையாளர், இராணிப்பேட்டை நகராட்சி ஆகியோர் மீது தனித்தனியே கடையின் குத்தகைதாரர்கள் (34 நபர்கள்) வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக திருவி. ஜெயபிரகாஷ் நாராயணன் சிறப்பு அரசு வழக்கறிஞர், சென்னை அவர்கள் எடுத்து நடத்தவும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.1,70,000/– (ஒரு வழக்கிற்கு ரூ. 5000/–) வழங்குமாறு கோரியுள்ளார். வழக்கு கட்டணம் ரூ.1,70,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி வழக்கு கட்டணம் ரூ. 1,70,000/–னை பொதுநிதியிலிருந்து வழங்கலாம். | நகரமன்றத் தீர்மானம் எண். 2887 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **(ந.க.எண் . 1579 /2018/அ3)** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2888</u>**<br>நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை –05 அவர்களின் மு.மு.எண். 12590/பி3/2015 நாள் 07.05.2015 ஆம் தேதிய உத்திரவில் இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தனியார் மூலம் (Service Provider)மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள மூன்றாண்டு காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் 36 பணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் திரு.கீரின்வாரியர் எண். 14,4–வது தெரு, கே.கே. நகர் , மணவாள நகர், திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண். 2020 நாள் 05.08.2015 ஆம் தேதியின்படி ஒராண்டு காலத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு 13.08.2016 ஆம் தேதியுடன் ஒராண்டு காலம் முடிவடைவதாலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி நகரமன்றத்தில் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்குவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் ஏற்கனவே 36 பணியாளர்களை சப்ளை செய்து வரும் மேற்படி நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண். 2387 நாள் 29.06.2016தேதியில் மூன்று மாத காலம் அல்லது மறு உத்திரவு பிறப்பிக்கும் வரை பணி நீட்டிப்பு செய்து வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் மேற்படி உத்திரவில் 36 பணியாளர்கள் வெளி முகவர்கள் நியமனம் செய்து கொள்ள மூன்றாண்டுகள் அனுமதி அளிக்கப்பட்ட காலம் 12.08.2018 ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளது.<br><br>மேற்படி 36 நபர்கள் வெளி முகவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள 14.08.2015 ஆம் தேதி முதல் உத்திரவு வழங்கப்பட்ட பின்பு 9 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலி ஏற்பட்டுள்ளது. தற்பொழுது மொத்தம் காலியாக உள்ள 45 துப்புரவு பணியாளர்கள் பணிக்கு மாவட்ட ஆட்சியர், வேலூர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் Service Provider மூலம் நியமனம் செய்து கொள்ள அனுமதி பெறுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, இதுநாள் வரை அனுமதி பெறப்படவில்லை.<br><br>மேற்படி சூழ்நிலையில் இந்நகராட்சியில் தற்போது உள்ள துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக துப்புரவு பணிகள் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உள்ளதாலும் இப்பணி அவசிய அத்தியாவசிய பணி என்பதாலும், ஏற்கனவே 36 துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்யும் கீரின் வாரியர் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் தொகை விகிதத்தின் அடிப்படையில் 13.08.2018 ஆம் தேதி முதல் 3 மாத காலத்திற்கு பணி உத்திரவு நீட்டித்து கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு மட்டும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்கண்ட தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்றத் தீர்மானம் எண். 2888 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **(ந.க.எண்.1994/2015/எச்1)** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2889</u>**<br>தூய்மை இந்தியா திட்டத்தில் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை Micro Composting Centre Onsite Composting Windro Vermi Compositng உரம் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி இந்நகராட்சியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பையில் உரம் தயாரிப்பதற்கு Onsite Compositing 3 இடங்களில் Windro Composting நகராட்சி அலுவலகத்திலும் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படிஇடங்களில் மக்கும் குப்பையில் Effective Micro Organism Solution நுண்ணுயிர் திரவம் கொண்டு மக்கச் செய்து இயற்கை உரம் தயாரிப்பதற்கு EMI Solution மருந்து தேவைப்படுவதால் 200 லிட்டர் EM Solution மருந்து வாங்குவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1840 /2018 /எச்1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2889 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2890</u>**<br>வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.பி.எப்1/3071/2018 நாள் 07.06.2018–ல் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டு சந்தாவாக நகராட்சி சார்பில் ரூ.2500/– செயலாளர், இந்தியன் ரெட்கிராஸ் சங்கம், வேலூர் மாவட்ட கிளை பெயரில் வங்கி வரைவோலையாக அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இராணிப்பேட்டை நகராட்சி சார்பில் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்குத ஆண்டு சந்தாவாக ரூ.2500/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று ஆண்டு சந்தை தொகை செலுத்தியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி ஆண்டு சந்தா தொகை ரூ.2500/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுதிக்கலாம்.<br>**(ந.க.எண் .1489 /2018/சி1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2890 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2891</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு.கே. கோவிந்தசாமி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக காஞ்சிபுரம் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்து உரிய உத்திரவு வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5 அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அன்னாரது விண்ணப்பத்திணை மேலனுப்பி வைக்கவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் . /2018/சி1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2891 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2892</u>**<br>இந்நகராட்சி மூலம் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் TURIP 2018-2019 திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>பணியின் விவரம்</u><br>1) வார்டு எண். 27– மஹாவீர் நகர் மற்றும் சங்கர் நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல்.<br>2) வார்டு எண்.1– காரை மசூதி தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.<br>3) வார்டு எண்.3 – பெரியார் நகர் 4–வது மற்றும் 7–வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.<br>4) வார்டு எண்.5 – டாக்டர் அம்பேத்கர் நகரில் சிறுபாலம் அமைத்தல்.<br>5) வார்டு எண்.6 – புதுத் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.<br>6) வார்டு எண். 17 – காட்டன் பஜார் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.<br><u>அலுவலக குறிப்பு</u> :-<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்ட மான்ய நிதி ரூ. 19.00 இலட்சம் (38%), மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மான்ய நிதி ரூ.15.00 இலட்சம் (30%), மாநில நிதிக்குழு மான்ய ஊக்க நிதி ரூ.11.00 இலட்சம் (22%), மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ. 5.00 இலட்சம் (10%) ஆக மொத்தம் ரூ.50.00 இலட்சம் என்ற விவரத்தின் அடிப்படையில் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1255/2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2892 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2893</u>**<br>இந்நகராட்சியில் 2016–2017 ஆம் ஆண்டு தணிக்கை நடைபெற்றதில், மேற்படி 2016–2017 ஆம் ஆண்டுக்கான பொதுநிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி மற்றும் தணிக்கை குறிப்பு தணிக்கை பத்திகள், தட்டச்சு செய்வதற்கும், பைண்டிங் செய்வதற்கும் மற்றும் நகல் எடுப்பதற்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.13000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1847 /2018 /பி3)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2893 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2894</u>**<br>இந்நகராட்சியில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெறுவதால் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்விநிதி போன்ற தலைப்பின் கீழ் உள்ள ஆண்டு கணக்குகளை தனியார் நிறுவனம் மூலம் கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் தயார் செய்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ. 50,000/– க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>விவரம்</u>**<br>1) Preparation of Journal Book Data Entry For 2017–2018<br>2) Preparation of General Ledger Data Entry for 2017–2018<br>3) Prepartion of Trailbalance, Balance Sheet Data Entry and Printout Charges for 2017–2018<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம் .<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை தனியார் நிறுவனம் மூலம் ஒப்படைத்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1848/2018/பி3)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2894 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2895</u>**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவின் TN23AX3073 எண். கொண்ட JCB வாகனத்திற்கு பொதுநிதியின் கீழ் ரூ.1,18,000/– மதிப்பீட்டில் புதியதாக 4 எண்ணிக்கை டயர்கள் சப்ளை செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2685 நாள் 30.10.2017–ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.06.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்றத் தீர்மானம் எண். 2895 அனுமதிக்கப்படுகிறது |

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1 | SRI BALAJI INDUSTRIES<br>52/B, TPK Nagar, Vellore | 0.42% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2 | G.V. Spares, 16/A, Bypass Road, Vellore | 0.17% மதிப்பீட்டை விட குறைவு. |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2–ல் கண்டுள்ள நிறுவனத்தின் மதிப்பீட்டைவிட 0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 2657 /2017/இ1)**

29.06.2018

**<u>பொருள் எண். 2896</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவின் TN23AX3073 எண். கொண்ட JCB வாகனத்திற்கு பொதுநிதியின் கீழ் ரூ.85,000/– மதிப்பீட்டில் ஆயில் நிரப்பி பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2690 நாள் 30.10.2017–ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.06.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1 | SRI BALAJI INDUSTRIES<br>52/B, TPK Nagar, Vellore | 4.65% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2 | G.V. Spares, 16/A, Bypass Road, Vellore | 1.30% மதிப்பீட்டை விட |

நகரமன்றத் தீர்மானம் எண். 2896 அனுமதிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | | குறைவு. |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2–ல் கண்டுள்ள நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 2655 /2017/இ1)**

29.06.2018

**<u>பொருள் எண். 2897</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள பழுதடைந்த Induction Motor-ஐ குடிநீர் நிதியின் கீழ் ரூ.1,60,000/– மதிப்பீட்டில் பழுது பார்த்து பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2748 நாள் 29.12.2017–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.06.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் மீதான ஒப்புதலுக்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1 | T. GANESH<br>Engineering & Electrical Worker,<br>72, Arani Main Road, Vellore | 0.94% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2 | SRI BALAJI INDUSTRIES<br>52/B, TPK Nagar, Vellore | 0.16% மதிப்பீட்டை விட குறைவு. |

<u>அலுவலக குறிப்பு:-</u>

நகரமன்றத் தீர்மானம் எண். 2897 அனுமதிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2–ல் கண்டுள்ள நிறுவனத்தின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 3262 /2017/இ1)** | |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2898</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான TN23S1735 எண்ணுள்ள குடிநீர் லாரிக்கு தகுதிச்சான்று பெறுவதற்காக அதில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திடவும், புதியதாக Water Tank பொருத்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்பதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி வாகனத்தின் பழுதுகளை அங்கீகரிக்கப்பட்ட பணி மனைகளின் மூலமாக மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1975 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2898 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2899</u>**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் பிரதான பம்பிங் மெயின் பைப்புகள் மற்றும் பாலுதியேட்டர் பின்புற பகுதியிலுள்ள இரயில்வே இருப்பு பாதை அருகில் உள்ள பம்பிங் மெயின் பைப்புகளில் ஏற்படும் உடைப்புகளை உடனடியாக சரி செய்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1973 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2899 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2900</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18 காரை லேபர் ஸ்கூல் தெருவில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயை முற்றிலுமாக அகற்றி புதியதாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,40,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1970 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2900 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2901</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வண்டி மேட்டுத் தெருவில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்கென வரும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி நிலையத்திற்கு குடிநீர் தேவையை ஏற்படுத்திட புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்திடவும் அதற்காகும் செலவினம் ரூ.1,50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1971 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2901 அனுமதிக்கப்படுகிறது |
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2902</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட இடங்களில் அமைந்துள்ள நகராட்சி பூங்காக்களுக்கு Fencing அமைத்து இரும்பு Grillgate பொருத்தி பெயர் பலகைகள் வைப்பதற்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.9,75,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>1) T.H அப்துல்ரஹ்மான்பூங்கா, ஆசிரியர்காலனி 2)ஜெயசீலன் பூங்கா, அம்மூர்சாலை 3) M. குணசேகரன் பூங்கா, அம்மூர் ரோடு விரிவாக்கம் 4) EID Parry India Ltd., பூங்கா, கெல்லீஸ்ரோடு 5) சாபுதீன் லே—அவுட், தண்டலம் ரோடு.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1974 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2902 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.06.2018 | **<u>பொருள் எண். 2903</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் பொதுமக்களின் குடிநீர் விநியோகத்திற்கென உள்ள குடிநீர் விநியோக மெயின் பைப்புகளில் ஏற்படும் உடைப்பு மற்றும் அடைப்புகளை உடனுக்குடன் சரி செய்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் கிடைத்திடும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1972 /2018/இ1)** | நகரமன்றத் தீர்மானம் எண். 2903 அனுமதிக்கப்படுகிறது |

xxxஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.